தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2020

ஆண்டு: 6 திகதி: 20/06/2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. தேவரதி குலராஜா

மாணவர் பெயர்: ______________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 30 | |
| வினா 2 | 14 | |
| வினா 3 | 12 | |
| வினா 4 | 12 | |
| வினா 5 | 12 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 30 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1.1 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**போக்குவரத்து**

மக்கள் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு பல விதமான போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். பிரயாணம் செய்யும் தூரத்திற்கு ஏற்ப, போக்குவரத்து சாதனங்களைத் தெரிவு செய்து பயன்படுத்துகின்றனர்.

முற்காலத்தில் மக்கள் தாம் போக வேண்டிய இடங்களுக்கு நடந்து சென்றனர். பின்னர் மாடு, குதிரை போன்ற மிருகங்களை இழுக்கும் வண்டிகளில் பூட்டி பயணம் செய்தனர். அதன் பின் எரிபொருட்களைப் பயன்படுத்தி விரைவாகச் செல்லும் வாகனங்களைக் கண்டுபிடித்து போக்குவரத்து செய்கின்றனர். தரைமார்க்கமாகப் பயணம் செய்ய துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டி, பேருந்து, தொடருந்து போன்றவற்றையும், கடல் வழியாகப் பயணம் செய்ய பாய்மரக்கப்பல், வள்ளம், பெரிய கப்பல்கள் போன்றவற்றையும், ஆகாய மார்க்கமாகப் பயணம் செய்ய விமானம், உலங்குவானூர்தி (ஹெலிகொப்டர்) போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர்.

விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியின் விளைவாக மிகநீண்ட தூரத்தை மிகக்குறுகிய நேரத்தில் சென்றடையத்தக்க வகையில் போக்குவரத்து சாதனங்களும், வசதிகளும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருவது உலகின் பொருளாதார விருத்திக்கு பெரும் துணைபுரியும் ஒரு விடயமாகும்.

1. முற்காலத்தில் பிரயாணம் செய்ய மக்கள் பயன்படுத்திய இரண்டு மிருகங்கள் எவை?

________________________________________________

________________________________________________

2. எரிபொருள் பயன்படுத்தாமல் பிரயாணம் செய்யக்கூடிய சாதனங்கள் இரண்டு தருக?

________________________________________________

________________________________________________

3. Helicopter என்பதன் சரியான தமிழ்ப்பதம் என்ன?

________________________________________________

________________________________________________

4. வான் வழியாகப் பயணம் செய்ய மக்கள் பயன்படுத்தும் இரண்டு சாதனங்கள் தருக?

________________________________________________

________________________________________________

5. கடல்வழிப் பயணத்திற்கு உதவும் இரண்டு சாதனங்கள் தருக?

________________________________________________

________________________________________________

6. தரைவழிப் போக்குவரத்தில் கூடிய மக்களை ஏற்றிச் செல்லக்கூடிய இரண்டு சாதனங்கள் தருக?

________________________________________________

________________________________________________

(6x2 = 12 புள்ளிகள்)

**1.2 கொடுக்கப்பட்ட தமிழ்ச் சொல்லுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை இணையுங்கள்.**

| | |
|---|---|
| 1 | வாகனங்கள் |
| 2 | பிரயாணம் |
| 3 | துவிச்சக்கரவண்டி |
| 4 | ரயில்பாதை |
| 5 | கடற்பயணம் |
| 6 | மின்சாரக்கம்பி |
| 7 | குறுகிய நேரம் |
| 8 | நீண்ட தூரம் |

| |
|---|
| Travel |
| Bicycle |
| Vehicles |
| Sailing |
| Electric line |
| Railway line |
| Long distance |
| Short time |

(8 x 1 = 8 புள்ளிகள்)

**1.3 விடை தருக**

1. குழந்தை அழுதது.

அழுதது என்பதன் எதிர்ச்சொல்.

______________________________________________________________________

2. தோழர்கள் யாவரும் கூடிமகிழ்ந்தனர்.

தோழர்கள் என்பதன் ஒத்தசொல்.

______________________________________________________________________

3. பறவை கீதம் பாடியது.

பறவை என்பதை பன்மையில் எழுதுக.

______________________________________________________________________

4. நாங்கள் விளையாடினோம்.

ஒருமை வசனமாக எழுதுங்கள்.

______________________________________________________________________

5. பரிசளிப்பு என்பதை பிரித்தெழுதுக.

______________________________________________________________________

6. மரம் + வேர் என்பதை சேர்த்தெழுதுக.

______________________________________________________________________

7. பூனை பால் குடிக்கும்.

இறந்த காலத்தில் எழுதுக.

______________________________________________________________________

8. வாணி கோவிலுக்குப் போனாள்.

எதிர் காலத்தில் எழுதுக.

______________________________________________________________________

9. இலங்கையில் தமிழ் வளர்த்த பெரியார் ஒருவரின் பெயர் தருக.

______________________________________________________________________

10. கூட்டுக்குடும்பம் என்றால் என்ன?

______________________________________________________________________

(10 x 1 = 10 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 14 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**2.1 கீழே உள்ள சொற்கள் பெயராகவும், வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்**

1. படி

    பெயர்: ______________________________________________

    வினை: ______________________________________________

2. ஆடு

    பெயர்: ______________________________________________

    வினை: ______________________________________________

3. அணை

    பெயர்: ______________________________________________

    வினை: ______________________________________________

**2.2 அடைப்புக்குள் இருக்கும் சொல்லுடன் சரியான உருபைச் சேர்த்து வசனத்தை முடியுங்கள்.**

1. வேடன் ஒருவன் ________________ (காடு) வாழ்ந்து வந்தான்.
2. வேடனுக்கு ______________ (நகரம்) சென்று வர விருப்பம் ஏற்பட்டது.
3. வேடன் __________________ (துப்பாக்கி) மிருகங்களைச் சுடுவான்.
4. இனியன் __________________ (நண்பர்கள்) மிகவும் அன்பாகப் பழகுவான்.
5. மேலதிகாரிகள் ________________ (இனியன்) வேலையைப் பாராட்டினார்கள்.
6. விரைவாக வேலையை செய்து முடித்ததால் ____________ (இனியன்) பதவி உயர்வு கிடைத்தது.
7. இனியன் __________________ (தந்தை) மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.
8. இனியனின் உயர்வு ____________ (தந்தை) மிகவும் பெருமை தந்தது.

| வினா இல | 3 | புள்ளிகள் | 12 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**தொடக்கப்பட்ட பின்வரும் கதையை உமது கற்பனையில் எழுதி முடிக்கவும். நீர் எழுதும் ஆக்கம் 50 சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.**

அன்று தமிழ்ப் பாடசாலையின் பேச்சுப்போட்டி நடைபெறும் நாள். எனது பேச்சை முழுமையாகப் பாடமாக்கி பெற்றோருக்கு சொல்லிக்காட்டி அவர்களின் பாராட்டைப் பெற்றேன். மதியம் 1:30 மணிக்கு அம்மா, அப்பாவுடன் கலாசார உடை அணிந்து புறப்பட்டோம். மழை பெய்துகொண்டிருந்தது. வீதியில் வாகன நெரிசல் அதிகமாக இருந்தது. திடீரென எமது மோட்டார் வாகனம் இயங்கமறுத்து விட்டது, நேரம் போகிறது. அப்பாவும் முயற்சி செய்து கொண்டே இருக்கிறார்.....ம்ம்ம் முடியவில்லை.......

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

___

| வினா இல | 4 | புள்ளிகள் | 12 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் காண்க.**

1. மாணவர்கள் தமிழ்மொழி வாழ்த்துப் பாடுவார்கள்.
2. கண்ணன் புல்லாங்குழல் வாசிக்கிறான்.
3. தோழர்கள் உணவகத்தில் பலகாரங்களை உண்டனர்.
4. மன்னனின் திட்டத்தை புலவர் அறிந்து கொண்டார்.

| எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

(4 x 3 = 12 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 12 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

இன்று வகுப்பில் தமிழரின் விழாக்களும், விளையாட்டுக்களும் என்ற பாடத்தைப் படித்தீர்கள். தமிழரின் விழாக்கள், விளையாட்டுக்கள் பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்புகிறீர்கள். அந்த விபரங்களை எழுதுமாறு உங்கள் தாயகத்தில் வசிக்கின்ற தாத்தா, பாட்டிக்கோ அல்லது வேறு உமக்குத் தெரிந்த ஒருவருக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்பு ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.**

1. சித்திரை வருடப்பிறப்பு.
2. விளையாட்டுகளும் உடல் ஆரோக்கியமும்.
3. அன்னையர் தினம்.
4. இயங்கலை (online) மூலம் தமிழ்ப் பாடசாலைக் கல்வி பற்றிய உமது அனுபவம்.
5. கொரோனா வைரஸ் பாதிப்பும் பாதுகாப்பும்.